எனது ராஜிநாமா

கமலா பிரசுராலயம்

எங்கள் லட்சியம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே

—பாரதியார்.

- நம்மை ஈன்றெடுத்த தேசத்தின் அடிமைத்தளைகளை அறுத்து எறிவதே ஒவ்வொருவரின் முதல் லட்சியமாக இருக்க முடியும்; இருக்க வேண்டும். இந்த மாபெரும் காரியத்தில் நாங்களும், பிரசுரங்கள மூலம் கலந்துகொள்ள முன்வந்திருக்கிறோம்.

- அரசியல் விடுதலையால் கிடைக்கும் அனுகூலங்களை நூற்றுக்கு நூறு அனுபவிக்க சமூகத்தில் சமத்துவம் கட்டாயம் இருக்க வேண்டும் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை. எனவே அரசியல் முன்னேற்றத்திற்கு மாத்திரமின்றி சமூகத்தில் அநீதிகள் நீங்கவும் ஏககாலத்தில் பாடுபடுவோம்.

- 'எல்லோரும் ஓர் குலம்' என்று பாரதியார் பாடியதின் எதிரொலிகள் இன்று தமிழ் நாடெங்கும் ரீங்காரம் செய்வதால் எங்கள் முயற்சிக்கு தமிழ் மக்களின் ஆதரவு கட்டாயம் இருக்கும் என்ற திட நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

கே. அருணாசலம்

ப. முத்தையா

நிர்வாக ஆசிரியர்கள், கமலா பிரசுரங்கள்

எனது ராஜிநாமா

டி. எஸ். சொக்கலிங்கம்

கமலா பிரசுராலயம்
ஸரபாலி ஹவுஸ்
157, பிராட்வே, ஜி. டி., சென்னை

முதல் பதிப்பு அக்டோபர், 1943.

விலை அணா 10

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை.

பதிப்புரை

ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கம் "தினமணி"யிலிருந்து ராஜிநாமாச் செய்தது தமிழ்நாட்டில் பெரிய பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. வடநாட்டு பத்திரிகை யுலகிலும் அப்படியே. கல்கத்தா "ஹிந்துஸ்தான் ஸ்டான்டர்டு", பம்பாய் "பிரீபிரஸ் ஜர்னல்", "போரம்" முதலிய பல பத்திரிகைகள் இந்த ராஜிநாமாச் செய்தியை, காரணங்களோடு பிரசுரித்தன. "ஆசிரியர்களை கொல்லும் கோயங்கா" என்ற தலைப்பில் ஓர் பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டது. ஸ்ரீ. கோயங்கா, சமாதானம் கூறுவதாக

நினைத்து, "பம்பாய் கிரானிகிளி"ல் ஓர் சப்பைக்கட்டு அறிக்கையை வெளிவிட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இதில் இவ்வளவு முக்கியத்வம் ஏன்?

பேனாவுக்கும் பணத்திற்குமிடையே சண்டை; அறிவுக்கும் அதிகாரத்திற்குமிடையே மோதல். தமது சகாக்களின் உரிமைகளை காப்பாற்றுவதற்காக ஆசிரிய பதவியை உதறித்தளளியதின் மூலம் பேனாவின் வலிமையை நிலை நாட்டிவிட்டார் ஸ்ரீ. சொக்கலிங்கம். விலகியிராவிட்டால், சுயேச்சையாக எழுதும் சுதந்திரத்திலும் பிற்பாடு முதலாளி கை வைத்திருப்பார். எனவே தமிழர் இந்த ராஜிநாமாவைக் குறித்து பரபரப்போ, பிரமிப்போ, ஏக்கமோ அடைய வேண்டியதில்லை. நன்றாக சந்தோஷப்படலாம். முதலாளியின் முணுமுணுப்பு இல்லாமல் பரிபூர்ண சுயேச்சையுடன் எழுதவும் தம்மோடு வேலைசெய்கிறவர்களுக்கு தக்க ஊதியம் கொடுக்கவும் ஸ்ரீ. சொக்கலிங்கத்திற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

இதர பத்திரிகையாளருக்கு இந்த ராஜிநாமா ஓர் படிப்பினை. பல பத்துவருஷங்களாக பத்திரிகைத் தொழிலில் உள்ள ஆனைப்பட்ட ஸ்ரீ. சொக்கலிங்கமே இப்படி அலட்சியம் செய்யப் பட்டாரென்றால், நேற்றும் இன்றும் இத்தொழிலில் புகுந்தவர்கள் எப்படி நடத்தப் படுவார்கள் என்பதை அவர்களே யூகித்துக் கொள்ளலாம். முன்னெச்சரிக்கையாக அவர்கள் இருக்க வேண்டியதற்கு இப்புத்தகம் ஓர் தூண்டுகோல்.

"பத்திரிகைகளின் வளர்ச்சி", "தற்கால தமிழ் பத்திரிகை" "அன்னிய வார்த்தைகள்" ஆகிய கட்டுரைகள், பத்திரிகை உலகை நம் கண்முன் கொண்டு நிறுத்துகின்றன.

எங்கள் பிரசுராலயத்தின் முதல் புத்தகமாக வெளியிட "எனது ராஜிநாமா"வை தந்து உதவிய ஸ்ரீ. சொக்கலிங்கத்திற்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

கமலா பிரசுராலயத்தார்.

பொருளடக்கம்

1. எனது ராஜிநாமா ... 5
2. பத்திரிகைகளின் வளர்ச்சி ... 18
3. தற்கால தமிழ் பத்திரிகை ... 30
4. அன்னிய வார்த்தைகள் ... 40

எனது ராஜிநாமா

நான் "தினமணி" ஆசிரியர் பதவியை ராஜிநாமா செய்தது அநேகரை திகைக்க வைத்து விட்டது. இது சாத்தியமா என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. (1) "தினமணி"யை நான் நடத்திய விதமானது பத்திரிகையின் கொள்கையில் எனக்கு பூர்ண சுதந்திரம் இருந்ததை காட்டியது. (2) ஆகவே பத்திரிகை என்னுடைய சொந்தப் பத்திரிகையாய்தான் இருக்க வேண்டுமென்று நண்பர்கள் நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் "தினமணி"யை நான் நடத்திய 9 வருஷ காலத்திலும் என்னுடைய ராஜிநாமாவை எப்பொழுதும் ஜேபியிலேயேதான் வைத்திருக்கவேண்டியதாய் இருந்தது என்பது அநேகருக்கு தெரியாது. அந்த ராஜிநாமா வெளியே வந்து விடுமோ என்ற சந்தர்ப்பங்கள்கூட இந்த 9 வருஷ காலத்தில் பல தடவைகளில் நேரிட்டதுண்டு. அம்மாதிரி முன்னால் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் எல்லாம் பத்திரிகையின் கொள்கையைப் பற்றியவை. கடைசியாக ஏற்பட்டது பணத்தை பற்றியது. கொள்கையை பற்றிய வரையில் சொந்தக்காரருக்கு பணப் பொறுப்பு எதுவும் இல்லாததால் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். பணப்பொறுப்பு ஏற்படக்கூடிய சம்பள உயர்வு பிரச்னை வந்ததும் முதலாளி தமக்குள்ள சுய குணத்தை காட்டினார். அதாவது பத்திரிகை கொள்கையில் தமக்கு ஆதிக்கம் இல்லாததால் சம்பள உயர்வில் தமது ஆதிக்கத்தை செலுத்த நினைத்தார்.

ஆசிரியர் பதவியில் ஒருவரும், சொந்தக்காரர் வேறு நபர்களாயும் இருக்கும் பட்சத்தில், ஒரு விஷயம் முக்கியமானது. அதாவது, ஆசிரியர் தமது உரிமையை நிலைநாட்டுவதற்காக வேலையை ராஜிநாமா செய்ய தயாராய் இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் வேலையும் சம்பளமும்தான் முக்கியமென்று ஆசிரியர் நினைப்பாரானால் அந்த விநாடியே அவர் தமது உரிமைகளை இழந்து விடுகிறார். அப்புறம் முதலாளிகளின் லாபத்திற்கான கொள்கைதான் பத்திரிகையின் கொள்கையாய் இருக்க முடியும்; சுதந்திர கொள்கை என்பது பறந்துவிடும். கொள்கையை முன்னிட்டு ஒரு ஆசிரியர் ராஜிநாமா செய்தால் உடனே அவர் ஸ்தானத்திற்கு வேறு நபர்களை பிடிக்க முதலாளிகள் முயலுவார்கள். பிரிட்டிஷ் சர்க்காருக்கு வக்காலத்து வாங்க ஆட்கள் தயாராய் இருக்கும் இந்த நாட்டில், முதலாளிகளுக்கு வேண்டிய கருங்காலிகள் கிடைப்பது பெரிய காரியமல்ல. திறமையற்றவர்களும், அதிருப்தியுள்ளவர்களும், சிறுமைப்பித்து கொண்டவர்களும் கருங்காலிகளாக மாற எப்பொழுதும் காத்துக்கொண் டிருப்பார்கள். அது மட்டுமல்ல; சாத்தான் தனக்கு ஆதாரமாக வேதத்திலிருந்து மேற்கோள் காட்டுவதைபோல, தங்களுடைய கருங்காலி தனத்தை நியாயமானதாக காட்டுவதற்கு ஆதாரங்களையும் தேடி வைத்துக்கொண் டிருப்பார்கள். ஆனால் முதலாளிகளுக்கு சலாம் போடும் அந்த கருங்காலிகளால் ஒரு பத்திரிகையை சுதந்திரமாய் நடத்த முடியுமா என்பதே கேள்வி. முடியவே முடியாது என்பது நிச்சயம். இந்த நிலைமையில் அந்த கருங்காலிகளுக்கு மனச்சாட்சி

இருக்குமென்றோ மனச்சாட்சியின்படி அவர்கள் எழுதுவார்களென்றோ எதிர்பார்ப்பது முடியாது. ஆகவே அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள் ஜனங்களுக்கு நன்மை செய்யும் தொண்டை விட்டு விட்டு முதலாளிகளின் கிராமபோன் பிளேட்டுகளாய் மாறி விடுகின்றன, அதனால் ஜனங்களின் ஆதரவை யும் அடுத்தபடியாக இழந்து விடுகின்றன.

"தினமணி"யை நான் நடத்திவந்த காலத்தில் சினிமா மதிப்புரையை பற்றி முதலாளிகள் முதலில் குறுக்கிட முயற்சித்தார்கள். அதற்கு நான் அசைய வில்லை. அந்த தகராறில் நான் ராஜிநாமா செய்ய வேண்டியது ஏற்படலாம் என்ற நிலைமைகூட தோன் றியது. ஆனால் அவ்வளவு தூரம்போக முதலாளிகள் அச்சமயம் துணிவு கொள்ளவில்லை. ஆகவே வேலையைவிட நான் தயார் என்ற நிலைமையில் இருந் ததால்தான் சினிமா மதிப்புரையை சுதந்திரமாய் எழுத முடிந்தது.

காங்கிரஸ் மந்திரி சபையை தாக்க மறுப்பு

அடுத்தபடியாக காங்கிரஸ் மந்திரி சபையால் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. ராஜாஜி உள்பட சென்னை மந்திரிகள், புலபாய் தேசாய், சர்தார் பட் டேல் ஆகியவர்களை விடாப்பிடியாக "தினமணி" ஆபீஸில் நடந்து வந்த ஆங்கில பத்திரிகை தாக்கி வந் தது. காங்கிரஸ் மந்திரி சபையை "தினமணி" ஆத ரித்து வந்தது. பலருக்கு இது பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது இயற்கையே. ஒரே காரியாலயத்தில் நடைபெறும் இரண்டு பத்திரிகைகள் இரண்டு வித மாய் எழுதுவது எப்படி சாத்தியம் என்று அவர்கள்

நினைத்தார்கள். இது ஒரு வியாபார தந்திரமோ என்று கூட சிலர் கேட்டார்கள். உண்மை என்னவென்றால் காங்கிரஸ் மந்திரி சபையை வேண்டுமென்று குற்றஞ் சொல்ல நான் விரும்பவில்லை. சொந்த தகராறுகளை ராஜீயத்தில் நுழைப்பதும் எனக்குவழக்கமில்லை, சட்ட சபைக்கு காங்கிரஸ் அபேட்சகராக தேர்ந்தெடுக்க வில்லை என்ற காரணத்திற்காக ராஜாஜியையும் சர்தார் பட்டேலையும் திட்டுவதோ, அல்லது ஒருவழக்கில் புலா பாய்தேசாய் எதிர்கட்சியில் ஆஜரானார் என்பதற்காக அவரை திட்டுவதோ, அதற்காக தன்னிடமுள்ள பத் திரிகைகளை உபயோகிப்பதோ வெறும் வடிகட்டிய அயோக்கியத்தனம் என்பது என்னுடைய அபிப் பிராயம். ஆகவே காங்கிரஸ் மந்திரி சபையை பொது வாக ஆதரிப்பதையே "தினமணி"யின் கொள்கையாக செய்தேன். இதை முதலாளி எதிர்த்தார், நான் அசையவில்லை. "தினமணி"யில் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கவேண்டும் என்று முதலாளி சொன் னார். அப்படி செய்வதை விட வேலையை உதறி விடுகிறேன் என்று பதில் கூறினேன். கடைசி யாக 1939-ம் வருஷம் ஆகஸ்ட் 1௳ நான் விலகிவிடு வது என்று பேசி முடிவு செய்தோம். அப்பொழுதே நான் வெளிவந்திருப்பேன். ஆனால் ஸ்ரீ. கோயங் காவுக்கு அச்சமயம் அவ்வளவு தைரியம் வரவில்லை. அதனால் 12-7-39-ல் எனக்கு ஒரு சமரஸ கடிதம் எழுதி னார். என் கொள்கையில் தலை யிடுவதில்லை என்று அதில் உறுதி சொன்னார். அதனால்தான் அக்காலத்தில் நான் விலகவில்லை. வேலையை விட்டுவிட தயார் என்று நான் சொன்னதால்தான் என்னுடையகொள் கையை அச்சமயத்திலும் காப்பாற்ற முடிந்தது.

தமிழ் இசை இயக்கத்திற்கு பிரேக் போட முதலாளி முயற்சி

பின்னால் தமிழ் இசை இயக்க சமயத்திலும் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. தமிழ் இசையை ஆதரிக்கக் கூடாதென்று ஸ்ரீ. கோயங்கா சொன்னார். நான் அதற்கு சம்மதிக்கவில்லை. எவ்வளவோ அவர் முயற்சி செய்தும் முடியாததால் சும்மா இருந்துவிட்டார். ஆகவே பத்திரிகையின் கொள்கையைபொறுத்தவரையில் யாரும் வால் நீட்ட முடியாதபடி நான் எச்சரிக்கையாய் பாதுகாத்து வந்தேன். இதனால்தான் "தினமணி" என் சொந்தப் பத்திரிகை தான் என்று பலர் நினைத்தார்கள். கொள்கை எனக்கு சொந்த மனதாய் இருந்தாலும், பணம் எனக்கு சொந்தமானதல்ல. அதனால், உதவி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று நான்கேட்டபோது முதலாளி சம்மதிக்கவில்லை. சம்பள உயர்வு கேட்காமல் இருந்திருந்தால் ராஜிநாமா செய்யவேண்டிய அவசியமே நேர்ந்திருக்காது; அல்லது கொள்கையில் விட்டுக் கொடுக்க தயாராய் இருந்திருந்தால், சம்பள உயர்வு தாராளமாய் கிடைத்திருக்கும். உதாரணமாக, நாங்கள் வெளியே வந்தபிறகு, ஆபீஸிலுள்ள சகலருக்கும் ஸ்ரீ. கோயங்கா சம்பளத்தை உயர்த்தி யிருக்கிறார். ஆகவே கொள்கையையோ சம்பள உயர்வையோ விட்டுக்கொடுக்க தயாராய் இல்லாமல் பத்திரிகையாளர்கள் வேலை செய்ய முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. இது தமிழ்நாட்டுக்கே ரொம்ப ஆபத்தானது. இதை தடுக்கவேண்டியது தமிழரின் கடமை. ஏனெனில் வியாபார புத்தியில்லாத பத்திரிகையால் தான் ஜனங்களுக்கு நன்மை செய்யமுடியும்.

வர்த்தகத்திற்காக அவற்றை நடத்துவதென்ருல் அவைகளால் ஜனங்களுக்கு கெடுதலே ஏற்படும்.

பத்திரிகைகள், முதலாளிகளின் கிராமபோன் ரிக்கார்டுகளல்ல

மேல் நாடுகளில் சில முதலாளிகள் கையில் அகப்பட்ட பத்திரிகைகள் கிராமபோன் ரிக்கார்டுகளை போல ஒரே மாதிரியாக கூச்சல் போட்டு வருகின்றன. அந்த முதலாளிகளின் நன்மைக்கு விரோதமாக அவை நடக்கமுடியாது என்பதை சொல்ல வேண்டியதில்லை. இதனல் நெருக்கடியான காலங்களில் ஜனங்களுக்கு உண்மையை சொல்லாமல் மறைக்கின்றன. பிரிட்டனில் இந்த யுத்தம் ஆரம்பமாகிற வரையில் யுத்தம் வரவே வராது என்ற அபிப்பிராயத்தை பல பத்திரிகைகள் உண்டுபண்ணி வந்தன. அதற்கு காரணம் முதலாளிகள்தான். ஆகவே, திடீரென்று யுத்தம் ஏற்பட்டபோது ஜனங்கள் தயாராயில்லாமல் தவித்து போனர்கள். இதேமாதிரி நிலைமை இந்தியாவில் ஏற்படுமா என்று கேட்கலாம். ஒரு தினசரிக்கு மேல் ஒரு முதலாளி நடத்துவதென்ற வழக்கம் நிலைத்துவிட்டால் அதுவும் தானகவே வந்துவிடும். தாய் பாஷையில் ஒரு தினசரியையும் ஆங்கிலத்தில் ஒரு தினசரியையும் பிரசாரத்திற்காகவோ, கொள்கைகளை பரப்புவதற்காகவோ நடத்திவருவதென்ருல் அது வேறு விஷயம். தமிழோ தெலுங்கோ தெரியாதவர்கள்கூட அந்த பாஷைகளில் தினசரிகளை நடத்த முன் வருவதென்ருல், அது வெறும் வர்த்தகத்தை தவிர வேறெதுவுமில்லை. அம்மாதிரி வர்த்தக நோக்கமுள்ளவர்கள் தேசீய போர்வை போர்த்திக்

கொண்டு வெளியே நடமாடுவதுதான் ரொம்ப ஆபத்தானது. பத்திரிகைகளை தங்கள் மனச்சாட்சியின் படி ஆசிரியர்கள் நடத்துவது சாத்தியமாய் இருக்க வேண்டுமானல், ஒருவர் பல பத்திரிகைகளை நடத்தும் வர்த்தகம் தலை காட்டக்கூடாது.

அல்லது பத்திரிகைகள் பொதுஜன சேவையையே முதன்மையாக கருதி நடப்பதற்கு மற்ருெரு ஏற்பாடு ரொம்ப அவசியம்: அதாவது பத்திரிகையின் ஆசிரியருக்கு நிர்வாகத்திலும் அதிகாரம் இருக்க வேண்டும். அல்லது ஆசிரியர்களே பத்திரிகைகளின் சொந்தக்காரர்களாய் இருந்து நடத்தவேண்டும். அநேக ஆசிரியர்களுக்கு அம்மாதிரி செய்வதற்கு வசதி இருப்பதில்லை. ஆகவே முதலாளி வேறு, ஆசிரியர்கள் வேறு என்ற முறையிலேயே அநேக பத்திரிகைகள் நடக்கின்றன, இப்படி நடக்கும்போது, ஆசிரியர்களை எப்பொழுது வேண்டுமானலும் மாற்றக்கூடிய அதிகாரம் முதலாளிக்கு ஏற்படுகிறது. ஒரு பத்திரிகை வளர்ச்சி யடைகிறவரையில் ஒரு ஆசிரியரை வைத்துக்கொண்டு அப்புறம் அவருக்கு சீட்டுக்கொடுத்து விட்டு, தன் இஷ்டப்படி நடக்க காத்துக்கிடக்கும் கருங்காலிகளை அமர்த்திக்கொள்ள அவர்கள் துணிகிருர்கள். இதனல் இந்திய பத்திரிகைகளில் ஆசிரியர்கள் திடீரென்று மாறுவது சாத்தியமாய் இருக்கிறது. இந்தியாவிலுள்ள வெள்ளைக்கார பத்திரிகைளில் அம்மாதிரி நடப்பதில்லை. ஏன்? அந்தப் பத்திரிகைகளுக்கு ஆசிரியர்களாய் வருகிறவர்களே அவர்கள் வேலையிலிருந்து விலகவேண்டிய வயது வருகிறவரையில் நிர்வாகத்தையும் பார்த்து வருகிருர்கள். அம்மாதிரி இந்திய பத்திரிகைகளிலும்

ஏற்பட்டால்தான் பத்திரிகை ஸ்தாபனங்கள் வளர முடியும்.

ஒரு ஆபீசில் ஒன்றுக்கு அதிகமாக 'தினசரி' பத்திரிகைகள் நடத்தும் வழக்கம் தமிழ் நாட்டிலும் இருக்கிறது இதைவிட விசேஷம் என்னவென்றால், எழுதத்தெரியாதவர்கள்கூட தாங்கள் ஆசிரியர்கள் என்று பத்திரிகைகளில் பிரசுரித்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே ஆசிரியர் என்று பெயர் படைத்திருப்பவர் ஒருவர், எழுதுகிறவர் மற்றொருவர் என்று ஏற்படுகிறது. இதுதான் ரொம்ப வேடிக்கையானது. எழுதத் தெரியாதவர் சொல்லுகிறபடி எழுத்தாளர் எழுதவேண்டும். சில ஆபீஸ்களில் அதை திருத்துவதற்கு மற்றொரு எழுதத் தெரியாதவரை நியமிப்பதுண்டு. சென்னையில் ஒரு ஆங்கில பத்திரிகை எப்படி நடக்கிறதென்பதை கேட்டால் வேடிக்கையாய் இருக்கும். அதற்கு ஆசிரியர் என்றுசொல்லிக் கொள்ளுகிறவருக்கு ஆங்கிலத்தில் தலையங்கம் எழுதவராது. அவருக்கு அடுத்தபடியாக பிரதம உதவி ஆசிரியராய் இருப்பவருக்கும் ஆங்கிலத்தில் ஷை தான். ஆகவே எழுதுகிற மெஷின் மாதிரி மூன்றாவது படியில் சிலரை வைத்திருக்கிறார்கள். ஆசிரியர் எந்த விஷயத்தை பற்றி எழுதவேண்டும் என்பதை சொல்லுவார். பிரதம உதவி ஆசிரியர் அதை வியாக்கியானம் செய்வார். எழுத்தாளர்கள் எழுதுவார்கள். அவர்கள் எழுதியதை முதலில் பிரதம உதவி ஆசிரியரும், பின்னால் ஆசிரியரும் திருத்த ஆரம்பிப்பார்கள். திருத்த அவசியம் இல்லாவிட்டாலுங்கூட, தங்களுடைய அதிகாரத்தை காட்டுவதற்காகவாவது "ராபணா" என்று திருத்துவார்கள். இம்மாதிரி

குட்டிச் சுவராக்கப்பட்ட தலையங்கங்கள் எப்படி இருக்கும் என்பதை சொல்லவாவேண்டும்? அந்த எழுத்தாளர்கள் சொந்தமாக எழுதினால் அழகாய் இருக்கும். ஆனால் அவர்களுக்கு ஆசிரியர் வேலையையோ, பிரதம உதவி ஆசிரியர் வேலையையோ விடுவதற்கு மனமில்லாத டாம்பீகக்காரர்கள் மேல்பதவியில் இருந்தால், அந்த பத்திரிகை எப்படி முன்னுக்கு வரமுடியும்?

எழுத்தாளரின் கட்டுப்பாடு

இம்மாதிரி அக்கிரமங்களை ஒழிக்கவேண்டுமானால் முதலில் எழுத்தாளர்களுக்குள் கட்டுப்பாடு வேண்டும். உலகத்திற்கெல்லாம் உபதேசிக்கும் இந்த எழுத்தாளர்களுக்குள் கட்டுப்பாடு என்பது கொஞ்சங்கூட கிடையாது. எல்லாரும் தனிக்காட்டு ராஜாக்கள்தான். சங்கமோ, அடிக்கடி கூடி பேசுவதோ கிடையாது.

பத்திரிகை தொழில் கௌரவமான தொழில் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எழுத்தாளர்கள் சங்கம் அமைப்பதினால் அந்த கௌரவம் போய் விடும் என்று நினைப்பதாய் இருந்தால் அது வெறும் அசட்டுத்தனம். அந்த அசட்டுத்தனத்தினால் நியாயமாய் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய சௌகரியங்களையும் இழந்து விடுகிறார்கள். சங்கமும், கட்டுப்பாடுமுள்ள தொழிலாளருக்கு கிடைக்கும் சௌகரியங்கள்கூட இவர்களுக்கு கிடைப்பதில்லை. மில் தொழிலாளருக்காவது குறைந்தபட்சகூலி இவ்வளவு, யுத்தபடி இவ்வளவு, சம்பள உயர்வு இவ்வளவு என்ற நிர்ணயம் இருக்கிறது. எழுத்தாளருக்கு இவற்றில்

ஒன்றில்கூட நிர்ணயம் கிடையாது. எழுத்தாளர்கள் கட்டுப்பாடாய் இருந்தால் கருங்காலிகள் தலையெடுக்கவிடாமல் கூட செய்யலாம்.

நானும் எனது நண்பர்களும் "தினமணி"யிலிருந்து ராஜிநாமா செய்தது எந்த வழியில் பார்த்தாலும் ரொம்ப நன்மையானது என்பதே எனது கருத்து. ஏனெனில் பணவிஷயத்திலும் எங்கள் இஷ்டப்படி பத்திரிகையை நடத்த இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. பண மூட்டைகளோ, பிற்போக்காளர்களோ முதலாளிகளிடம் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கலாம். ஆனால் எங்களிடம் அவர்கள் நெருங்க முடியாது; எனவே கொள்கையை பொறுத்தவரையில் எவ்வித உபத்திரவமும் இல்லாமல் நடுநிலைமையில் நின்று தமிழ்நாட்டுக்கு சேவைசெய்ய முடியும். புதிதாய் பத்திரிகை ஆரம்பிப்பதென்பது ரொம்ப கஷ்டமாயிற்றே, இன்னம் கொஞ்சகாலம் கழித்து ராஜிநாமா செய்யக்கூடாதா என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். கஷ்டமான வேலைதான். அதை அறிந்துதான் ஸ்ரீ. கோயங்கா எங்கள் ராஜிநாமாவை ஒப்புக்கொண்டார். சுலபமாய் தினசரியை ஆரம்பிக்கக்கூடிய சௌகரியங்கள் இருந்தால், ராஜிநாமாக்களை ஒப்புக்கொள்ள அவர் துணிந்திருக்கமாட்டார். புதிதாய் பத்திரிகை ஆரம்பிப்பதற்கு ஒவ்வொரு படியிலும் முட்டுக்கட்டை இருக்கிறது. அந்த இடையூறுகளை சமாளித்துக்கொண்டு பத்திரிகையை ஆரம்பிப்பது தான் நமது ஊக்கத்தின் உறுதியை காட்டக்கூடியது. சாதாரண காலத்தில் ஊக்கமோ உறுதியோ இல்லாதவர்கள் கூட பணத்தைக்கொண்டு சுலபமாய் ஆரம்பித்துவிடலாம். இப்பொழுது ஆரம்பிப்பதென்

ருல் பணத்தால் மட்டும் செய்துவிட முடியாது. நண்பர்களின் ஆதரவைக் கொண்டுதான் செய்யமுடியும். அந்த ஆதரவுக்கோ குறைவில்லை. நான் ராஜிநாமா செய்ததைகண்டு திகைத்துப்போனதாக நண்பர்கள் எழுதினார்கள். ஆனால் எனக்கு வந்த நண்பர்களின் கடிதங்களை பார்த்து நான் திகைத்துப் போனேன். தமிழ் நாட்டில் மட்டுமல்ல; மற்ற இடங்களிலிருந்து கூட சகல உதவிகளையும் செய்வதாக நண்பர்கள் கடிதங்கள் எழுதினார்கள். நான் எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் கடிதங்கள் வந்தன. சென்னையிலுள்ள சில தினசரி பத்திராசிரியர்கள்கூட எனது புதிய பத்திரிகைக்கு உதவிசெய்ய முன் வந்திருக்கிறார்கள். இந்த உதவிகளெல்லாம் பணத்தால் பெறக்கூடியவையல்ல. நட்பினால்தான் பெறக்கூடியவை. கொள்கையில் அபிப்பிராயபேதம் இருந்தபோதிலும் வெவ்வேறு கொள்கைகளை சேர்ந்தவர்கள் கூட எனக்கு ஆதரவுகொடுக்க முன்வந்திருப்பதை பார்த்தால் ஒன்று நிச்சயமாகிறது. அதாவது, சொந்த லாப நஷ்டத்தையோ, விருப்பு வெறுப்புகளையோ கவனிக்காமல் "தினமணி"யை நான் நடத்திவந்த கொள்கையை அவர்கள் பாராட்டுகிறார்கள் என்பதே அந்த உண்மையாகும். இம்மாதிரியாக நண்பர்களின் அபரிமிதமான ஆதரவு இருக்கும்போது, புது பத்திரிகைக்கு முன்னால் நிற்கும் இடையூறுகளை நீக்குவது என்ன பிரமாதம்? அந்த இடையூறுகள் நீங்கி புதிய பத்திரிகை வந்துவிடுமென்பதில் எனக்கு சந்தேகமில்லை.

---

2. பத்திரிகைகளின் வளர்ச்சி

சென்ற பத்து வருஷங்கள்தான் நமது நாட்டுப் பத்திரிகைகளின் சரித்திரத்தில் ரொம்ப முக்கியமானகட்டம். இந்தக் கட்டத்தில் பத்திரிகைகள் வளர்ந்த மாதிரி இதற்கு முன் எப்பொழுதுமே வளர்ந்ததில்லை. அதே மாதிரி பத்திரிகையாளர்கள் பெருகியதற்கும் இந்தக் கட்டத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளே காரணமாகும். பத்திரிகையாளர்களில் பெரும்பாலோருடைய வருமானம் மிகக் குறைவாயிருக்கலாம். என்றாலும், நாம் ஒரு பெரிய பொது ஜன சேவை செய்கிறோம் என்ற திருப்தி அவர்களுக்கு இருக்கிறது. சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க நீதிபதிகளும், போலீஸ்காரர்களும் இருக்கிறார்கள். வெளிநாட்டு படையெடுப்பை எதிர்த்து நம்மைப் பாதுகாக்க ராணுவம் இருக்கிறது. பணத்தைப் பாதுகாக்க பாங்க் இருக்கிறது. மிருகங்களைப் பாதுகாக்கக்கூட சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இம்மாதிரி கட்டுப்பாடான ஏற்பாடுகள் எதுவும் இல்லை. அந்த வேலையை பத்திரிகையாளர்களே செய்து வருகிறார்கள். ஜனநாயகந்தான் ஜனங்களின் உரிமைகளுக்கு அஸ்திவாரம். அந்த அஸ்திவாரத்தை பாதுகாக்கும் வேலையும், பொறுப்பும் அவர்களைச் சேர்ந்தது. இதை நினைக்கும் போதுதான் வரும்படி குறைவாய் இருந்தாலுங்கூட மனதில் ஒரு பெரிய சந்தோஷம் ஏற்படுகிறது.

மேல்நாடுகளிலும், கீழ்நாடாகிய ஜப்பானிலும் லட்சக்கணக்கில் பத்திரிகைகள் செலவாகின்றன. ஆனால், இந்தியாவில் பத்திரிகை படிக்கும் வழக்கத்தை முதலில் அதிகரித்தது சென்ற மகாயுத்தமாகும். யுத்தச் செய்திகளை ஜனங்கள் படிக்கவேண்டுமென்ற ஆவலினால், பத்திரிகைகள் வாங்க ஆரம்பித்தார்கள். அதற்கடுத்தாற் போல; பத்திரிகைகள் அதிகரிப்பதற்கு அடுத்த தூண்டுதலாயிருந்தது மகாத்மாவின் சத்தியாக்கிரக, ஒத்துழையாமை இயக்கங்களாகும். 1920-ம் வருஷத்தில் இந்த இயக்கங்களினால் பத்திரிகைகள் அதிகமாயின. இந்த இரண்டையும்விட மிகவும் அதிகமான வளர்ச்சியைக் கொடுத்தது 1930-ம் வருஷத்தில் ஆரம்பமான சட்டமறுப்பு இயக்கமாகும். அதிலிருந்து நமது நாட்டில் பத்திரிகைகள் வெகுவேகமாய் வளர்ந்து வருகின்றன. ஜனங்களின் கவனத்தை இழுக்கக்கூடிய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக 1930-ம் வருஷத்திலிருந்து நமது நாட்டில் நடந்து வருவதே இந்த வளர்ச்சிக்குக் காரணம். இந்த யுத்தத்தில் பத்திரிகைகள் இன்னம் அதிகமாய்ப் பரவியிருக்கமுடியும். பத்திரிகை வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். ஆனால், பத்திரிகைகளுக்கு வேண்டிய காகிதத்திற்கு பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், வளர்ச்சி தடைபட்டிருக்கிறது. யுத்தம் வரப்போகிறதென்பதை முன்பே எல்லோரும் அறிந்திருந்தும்கூட, பத்திரிகை-காகிதத்தை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை இந்நாட்டில் ஏற்படுத்தாமல் போனது ஒரு பெரிய துரதிருஷ்டம். தற்சமயம் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதும் கஷ்டம். சர்க்கார் மனது

வைத்தால் சாத்தியப்படும். ஆனால் மோட்டார் தொழிற்சாலைகளையும், விமான தொழிற்சாலைகளையும் ஏற்படுத்துவதற்குக்கூட பின்வாங்கும் சர்க்கார் பத்திரிகை-காகிதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவார்களென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? பத்திரிகை-காகிதத்திற்கு வெளி நாடுகளை எதிர் பார்க்க வேண்டிய நிலைமையில் நமது நாடு இருப்பதால், இந்த யுத்தத்தினால் பத்திரிகைகள் எவ்வளவு வளர்ச்சியடைய முடியுமோ அந்த வளர்ச்சியைப் பெற முடியவில்லை. அமெரிக்காவும் யுத்தத்தில் சேர்ந்துவிட்டதால், ஆரம்பத்தில் இருந்த காகிதப் பஞ்சம் இன்னம் கடுமையாகிவிட்டது. எவ்வளவு கஷ்டமிருந்தபோதிலும், பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக இப்பொழுது செய்யும் வேலைகள், யுத்தத்திற்குப் பின்னால் பலன் கொடுத்தே ஆக வேண்டும். ஏனெனில், பத்திரிகை படிப்பதென்பது படித்துவருகிறவர்களுக்கு ஒரு அவசியமான வழக்கமாய்விட்டது. காபி பழக்கமுள்ளவர்கள் எப்படி காபியை விடமாட்டார்களோ, எப்படி ஆவலோடு அதைப் பெற முயற்சிப்பார்களோ, அதேமாதிரி பத்திரிகை படிப்பவர்களுக்கு பத்திரிகை மீது அபிமானம் ஏற்படும். இந்த அபிமானிகளை வரவர அதிகமாக்கிக் கொண்டுபோக வேண்டியது பத்திரிகையாளர்களின் கடமை.

தாய்பாஷை பத்திரிகைகளின் எதிர்காலம்

நமது நாட்டிலுள்ள ஆங்கில பத்திரிகைகளின் எதிர்காலம் யுத்தம் எப்படி முடிகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. ஆனால் தாய்பாஷை பத்திரிகை

களின் நிலைமை அப்படியல்ல. தாய்பாஷை பத்திரிகைகளுக்கு எதிர்காலம் மிகுந்த மேன்மையாயிருக்கும். இதை மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்யவேண்டும். அப்பொழுதுதான் இப்பொழுதுள்ள கஷ்டங்களைக் கண்டு நாம் மலைக்காமல் இருக்கமுடியும்.

நமது மாகாணம் பெரிய மாகாணம். முக்கியமான தினசரிகள் சென்னையில்தான் பிரசுரமாகின்றன. இந்த நிலைமை இனி நீடிக்க முடியாது. தமிழ் பத்திரிகைகளை பொறுத்த வரையில் கண்டிப்பாய் முடியாது. சென்னையில் பிரசுரமாகும் பத்திரிகைதான் 600 மைல் வரைபோய் ஜனங்களுக்கு செய்தியை தெரிவிக்க வேண்டும் என்பது, ரேடியோக்கள் பெருத்த இக்காலத்தில் இயற்கைக்கு விரோதமானதாகும். இன்று காலையில் ஒரு முக்கியமான செய்தியை ரேடியோவில் கேட்டவர்கள் அதை நாளைய பத்திரிகையில் பார்க்கும்போது பழைய செய்தியாகவே அவர்களுக்கு தோன்றும். அதனால் செய்தி பத்திரிகையை படிப்பதற்கு எவ்வளவு ஆவல் இயற்கையாக ஏற்படுமோ அது இல்லாமல் போய் விடுகிறது. இந்த விஷயத்தில் தினசரி பத்திரிகைகளுக்கு ரேடியோக்கள் உண்மையாகவே பெரிய போட்டியாக இருக்கின்றன. இதற்கு சென்னை பத்திரிகைகள் வழி செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. அதாவது, சென்னைக்கு வெளியே முக்கியமான நகரங்களிலும் தினசரி பத்திரிகைகளை பிரசுரித்து செய்திகள் சீக்கிரமாக ஜனங்களுக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும். இவ்வழியில் முன்னால் சிலர் முயற்சி செய்து வெற்றிபெற வில்லை என்பது உண்

மையே. அக்காலத்தில் பத்திரிகை வாசிப்பவர்கள் இவ்வளவு அதிகம் கிடையாது; தினசரியை நடத்துவதற்கான செளகரியங்களும் இவ்வளவு இல்லை; முக்கியமாக, ரேடியோவின் போட்டி ஆரம்பமாகவே இல்லை. எனவே இப்பொழுது அந்த வழியில் முயற்சி செய்து தான் ஆகவேண்டும். அந்த முயற்சி பலிப்பதற்கான பக்குவமும் வந்துவிட்டது. ஆகவே மதுரையில் "தந்தி" என்ற பெயருடன் தினசரியை நடத்த முன்வந்த ஸ்ரீ ஆதித்தனை பாராட்டுகிறேன். மதுரையில் மட்டுமல்ல, கோயம்புத்தூர், பெங்களூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் சீக்கிரமாக தினசரிகளை ஆரம்பிக்கக்கூடிய நிலைமை ஏற்படுமென்று நம்புகிறேன். எனவே தமிழ் பத்திரிகைகளின் எதிர்காலம் மிகுந்த சிலாக்கியமாகப் போகிறது என்பதை நிச்சயமாய் நம்பலாம்.

பத்திரிகைகளில் கெளரவமான முறையில் வாதப்பிரதிவாதங்கள் நடத்துவதில் எனக்கு எப்பொழுதுமே நம்பிக்கையுண்டு. முக்கியமான பிரச்னைகளை எடுத்துக்காட்டி ஜனங்களின் கவனத்தைஇழுக்க வேண்டியது பத்திரிகைகளின் முக்கியமான கடமைகளில் ஒன்று. வாதப் பிரதிவாதங்களால் இருதரப்பு அபிப்பிராயங்களையும் ஜனங்கள் அறிந்துகொள்ள முடியும். விவாத பிரச்னையில் அவர்களுக்கு சிரத்தையும் ஏற்படுகிறது. பத்திரிகை வளர்ச்சிக்கும் அது ஒரு காரணமாய் அமைகிறது. ஆனல், கெளரவமான முறையிலேயே வாதப் பிரதிவாதங்கள் இருக்க வேண்டுமென்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். அப்பொழுதுதான் மனிதரின் உயர்ந்த குணங்களும் புத்திசாலித்தனமும் வெளிப்பட்டு

ஜனங்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும். கேவல மான முறையில் வாதங்கள் இறங்குமானால், மனித ரின் இழி குணங்களே வெளிப்படும். இதனால் ஏற் படும் அனர்த்தங்களை அளவிடமுடியாது. ஆகவே கேவலமான முறையில் வாதப் பிரதிவாதங்கள் இருப்பதை விட, இல்லாமல் இருப்பது சிலாக்கியம்.

விளம்பர வருமானத்தின் முக்கியத்துவம்

பொது வாழ்வில் ராஜீயம் மட்டுந்தான் முக்கிய மானதென்று நினைக்கக்கூடாது. வர்த்தகம், விவசா யம், கைத்தொழில் முதலிய எல்லாத் துறைகளும் முக்கியமானவைதான். இவற்றில் ஈடுபட்டுள்ளவர் களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துக் காட்டி அவைகளை நீக்குவதற்கு பத்திரிகைகள்மூலம் வேலை செய்தால், அவர்களையும் பத்திரிகைகளைப் படிக்கும்படி செய்ய லாம். அதனால் பத்திரிகைகள் வளர்ச்சியுறும். எல்லா வற்றிற்கும் மேலாக, தாய்பாஷையில் சிரத்தையும் கௌரவமும் கொள்ளும்படி ஜனங்களைச் செய்ய வேண்டும். தாய்பாஷை பத்திரிகைகளுக்குத்தான் எதிர்காலம் இருக்கிறது. சிலர் ஆங்கில பத்திரிகையை வாங்கினாலும், அவர்கள் வீட்டிலுள்ள ஆங்கிலம் தெரியாதவர்கள் தாய்பாஷை பத்திரிகையை வாங்கித் தான் ஆகவேண்டும். ஆகவே ஆங்கில பத்திரிகை களின் தற்கால நிலைமை எதிர்காலத்தில் மாறுவிட்டா லுங்கூட, தாய்பாஷை பத்திரிகைகள் வளர்ச்சி யடைவதற்கு இடமிருக்கிறது. பத்திரிகைகளின் வளர்ச்சியை பொறுத்துத்தான் பத்திரிகையாளரின் வருமானமும் இருக்கிறது. பத்திரிகைகள் அதிக மாய்ச் செலவானால்தான் விளம்பர வருமானம்

அதிகமாகும். விளம்பர வருமானம் இல்லாமல் பத்திரிகையை நடத்த முடியாது. தினசரி பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் பத்திரிகைகளின் பக்கங்களை சர்க்கார் கட்டுப்படுத்துவதற்கு முன்னால் வரையில் பத்திரிகை என்ன விலைக்கு விற்கப்பட்டதோ அதற்கு மேலாக அரைப் பங்காவது பத்திரிகையை உற்பத்தி செய்யும் செலவு ஆயிற்று. ஒன்றறை அணு ஆகிற பத்திரிகையை ஒரு அணுவுக்கு எப்படி விற்கிறார்கள் என்றால், விளம்பர வருமானம் அதற்கு ஈடு கொடுக்கிறது. விளம்பரவருமானம்உயருவதைப் பொறுத்துத்தான் பத்திரிகையில் செய்யப்படும் சீர்திருத்தங்கள் இருக்கின்றன. பத்திரிகையின் விற்பனை உயர்வை பொறுத்துத்தான் விளம்பர வருமானத்தின் உயர்வு இருக்கிறது. ஆங்கில பத்திரிகைகளில் செய்யப்படும் உயர்வான அபிவிருத்திகளைப்போல தாய்பாஷை பத்திரிகைகளில் இல்லையே என்று சிலர் கேட்கிறார்கள். இரண்டும் ஒரே விலைக்கு விற்கப்படும் போது, ஏன் ஆங்கில பத்திரிகைகளைப்போல தாய்பாஷை பத்திரிகைகள் இருக்கக்கூடாது என்று அவர்கள் வியாக்கியானஞ் செய்கிறார்கள். ஆனால் இரண்டுக்கும் விளம்பர வருமானம் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்தியாவில் ஆங்கில பத்திரிகைகளுக்கு உயர்ந்த படியாக விளம்பர வருமானம் என்ன என்பதை கேட்டால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். இந்தியாவில் ஒரு ஆங்கில பத்திரிகைக்கு மாதம் மூன்று லட்சம் ரூபாய் விளம்பரத்திலிருந்து கிடைக்கிறது. மூன்று லட்சம் ரூபாய்கள் கிடைக்கும்போது எல்லாத் துறைகளிலும்

முதல்தரமானவைகளையே அப்பத்திரிகை செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இந்திய பத்திரிகைகளில் மாதம் லட்சம் ரூபாய்க்குமேல் வருமானமுள்ளது எதுவுமில்லை. நமது மாகாணத்திலுள்ள தாய்பாஷைப் பத்திரிகைகளின் விளம்பர வருமானம் ரொம்ப குறைவு. மாதம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் விளம்பர வருமானமுள்ள தாய்பாஷை பத்திரிகை நமது மாகாணத்தில் எதுவுமில்லை. பத்தாயிரம் வருமானமுள்ள தாய்பாஷை பத்திரிகையை, லட்சம் வருமானமுள்ள ஆங்கில பத்திரிகையைப் போல எப்படி நடத்த முடியும்?

தாய்பாஷையை கௌரவிக்கவேண்டும்

மாதம் 70 ஆயிரம், 80 ஆயிரம் வருமானமுள்ள இரு தாய்பாஷை பத்திரிகைகள் பிற மாகாணங்களில் இருக்கின்றன. அவைகளுக்குக்கூட அவற்றின் விற்பனைக்குத் தகுந்த அளவு விளம்பர வருமானம் இல்லை. ஆகவே தாய்பாஷை பத்திரிகைகள் என்றால், விளம்பர விகிதம் குறைவாய்த்தான் இருக்க வேண்டும் என்று விளம்பரக்காரர்கள் நினைப்பதாய்த் தெரிகிறது. தாய்பாஷைக்கு ஜனங்கள் கௌரவம் கொடுக்க ஆரம்பித்தால்தான் விளம்பரக்காரர்களின் அபிப்பிராயம் மாறும். தாய்பாஷைக்காரர்களே கௌரவம் கொடுக்கவில்லையானால் மற்ற பாஷைக்காரர்கள் எப்படி கொடுப்பார்கள்? ஆங்கில பத்திரிகைகளுக்கு சந்தாதார் அதிகமென்றும், தாய்பாஷை பத்திரிகைகளுக்கு சந்தாதார் குறைவென்றும் சில விளம்பரக்காரர் சொல்லுகிறார்கள். இது தவறான அபிப்பிராயம். ஒரு

கணக்கு கொடுக்கிறேன். ஆங்கில பத்திரிகைககு ஒரு அங்குலத்திற்கு நாலரையணு வீதம் ஆயிரம் பிரதி களுக்கு விகிதம் வருவதாய் வைத்துக்கொள்ளு வோம். தாய்பாஷை பத்திரிகைகளுக்கு ஒரு அங்குலத் திற்கு ஆயிரம் பிரதிகளுக்கு ஒரு அணு வீதந்தான் கிடைக்கிறது. எனவேபத்திரிகைகளுக்கு விற்பனை யைப் பொறுத்து விளம்பர விகிதம் இருபதாகச் சொல்லமுடியாது. தாய்பாஷை பத்திரிகை என்றுலே குறைவான விகிதந்தான் கொடுக்கவேண்டும் என்ற தவருன அபிப்பிராயம் இருக்கிறது. இதைப் போக் கினல்தான் தாய்பாஷை பத்திரிகைகள் அபிவிருத்தி யடைய முடியும். இதைப் போக்குவதற்கு தாய் பாஷை பத்திரிகையாளர்கள் ஒன்று சேர்ந்து முயற் சித்தால்தான் சாத்தியமாகும். தாய்பாஷை பத்திரிகை களுக்கு விளம்பர விகிதம் குறைவாய்க் கொடுப்ப தற்கு மற்ருெரு காரணத்தை விளம்பரக்காரர்கள் சொல்லுகிருர்கள். அதாவது, ஆங்கிலம் படித்தவர் கள்தான் சரக்குகள் வாங்குகிருர்களாம். இந்த வாதமும் அவ்வளவு பொருத்தமாயில்லை. புருஷருக்கு வேண்டிய சாமான்களை ஆங்கிலம் படித்தவர்கள் வாங்குவதாக வைத்துக்கொள்ளுவோம். ஆங்கிலம் படியாத பெண்களே அதிகம். அவர்கள் வாங்குகிற சாமான்களைப் பற்றி தம் பாஷை பத்திரிகைகளி லிருந்துதானே அவர்கள் அறிய முடியும்? தவிரவும் தாய்பாஷை பத்திரிகை படிப்பவர்கள் வர வர ஏராளமாய்ப் பெருகிக் கொண்டே போகிருர்கள். ஆங்கில பத்திரிகைகளில் மட்டும் விளம்பரம் செய்கிற வர்கள், இவர்களுக்குத் தங்கள் சரக்குகளைப்பற்றி அறிவிக்காமலே போய்விடுகிருர்கள். ஆங்கிலம்

படித்தவர்கள்தான் சரக்குகளை வாங்க லாயக்கானவர்கள் என்று எந்த வர்த்தகரும் சொல்லத் துணியமாட்டார் என்று நினைக்கிறேன். அப்படியானால் இதுவரை அவர்கள் செய்து வந்த தவறை திருத்திக்கொள்ள வேண்டும். ஆங்கிலம் படித்தவர்களிடம் எவ்வளவு விளம்பரம் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்தாய் விட்டது. ஆங்கிலம் தெரியாதவர்கள் மார்க்கெட் அப்படியே இருக்கிறது. அங்கே நுழைந்து விளம்பரம் செய்து தங்கள் சரக்குகளை அதிகமாய்ச் செலவழிக்க அவர்கள் ஏன் முயற்சி செய்யக்கூடாது?

நமது மாகாணத்தின் பெருமை

சென்னை மாகாணத்திலுள்ள எல்லா பத்திரிகைகளுக்கும் மற்றொரு அசௌகரியம் இருக்கிறது. வெளிநாட்டு விளம்பரக்காரர்களின் ஏஜெண்டுகள் பம்பாயிலும், கல்கத்தாவிலும் தான் இருக்கிறார்கள். இதனால் கல்கத்தாவிலும் பம்பாயிலுமுள்ள பத்திரிகைகளுக்குத்தான் முதலில் விளம்பரம் கொடுக்கிறார்கள். சென்னையைப்பற்றி சரியானபடி அவர்கள் தெரிந்து கொள்ள முடிவதில்லை. இதனால் சென்னை மாகாணத்தில் தங்கள் சரக்குகள் குறைவாகவே விற்பனையாவதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது அநேக சரக்குகளைப் பொருத்த வரையில் தவறான அபிப்பிராயம். இதைப்பற்றி நன்றாய் விசாரணை செய்த பின்பே நான் இதைச் சொல்லுகிறேன். ஒரு குறிப்பிட்ட சரக்கைப்பற்றி உங்களுக்கு உதாரணம் கொடுக்கிறேன். அந்த சரக்கிற்கு இந்தியாவில் விளம்பரம் செய்வதற்கு

ஒதுக்கப்பட்ட பணத்தில் 100-க்கு 23-ஐ பம்பாய் பத்திரிகைகளுக்கும், 100-க்கு 14-ஐ சென்னை பத்திரிகைகளுக்கும் கொடுத்தார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் அந்த சரக்கின் விற்பனையைப் பார்த்தால் பம்பாயில் 1700 டஜன் பாட்டில்களும், சென்னையில் 1500 டஜன் பாட்டில்களும் விற்பனையாயிருந்தன. இதைப் பார்த்தால் நமது மாகாணத்தில் எவ்வளவு விற்பனையாகிறதோ அதற்குத் தக்கபடி இங்குள்ள பத்திரிகைகளுக்கு விளம்பர விகிதாச்சாரம் கிடைப்பதில்லை யென்பதை அறிந்து கொள்ளலாம். நமது மாகாணத்தின் பத்திரிகை அபிவிருத்திக்கு இந்த நிலைமை ஒரு இடையூறாய் இருக்கிறது. சென்னை மாகாணம் தெற்கே இருப்பதால் முக்கியத்துவமுள்ளதல்ல என்ற குருட்டு நினைப்பு பலமாயிருக்கிறது. இதைப் பத்திரிகையாளர்கள் போக்கடிக்க வேண்டும். நமது மாகாணத்தைப்பற்றி நாம் கேவலமாய் நினைக்காமல் இருந்தால்தான் இந்த நிலைமையை மாற்ற முடியும். நமது மாகாணம் மற்ற எந்த மாகாணத்திற்கும் எதிலும் குறைந்ததல்ல. பத்திரிகை தொழிலைப்பார்த்தால்நமது மாகாணம் முதன்மையாய் நிற்கிறது. இந்தியரால் நடத்தப்படும் ஆங்கில பத்திரிகைகளில் நமது மாகாணத்தைச் சேர்ந்த "ஹிந்து" தான் இன்று முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. இந்திய பத்திராசிரியர் சங்கத்தை ஆரம்பித்து அதற்கு தலைமை வகித்து அதை திறமையுடன் நடத்தி பத்திரிகைகளின் உரிமைகளைக் காப்பாற்றிவரும் ஸ்ரீ. கே. ஸ்ரீனிவாசன் நமது மாகாணத்தைச் சேர்ந்தவர்தான். இந்தியாவிலுள்ள முக்கியமான பத்திரிகைகளில் எதை பார்த்தாலும் அங்கே நமது

மாகாண வாசிகள் கண்டிப்பாய் இருப்பார்கள். பத்திரிகைத் தொழிலில் நமது மாகாணத்தாரை யாரும் மிஞ்சிவிடவில்லை. பத்திரிகைகளில் பிரசுரமாகும் பிரசங்க சுருக்கங்களுக்கும் நமது மாகாணம் பிரசித்தி பெற்றது. இவ்வளவு திறமையாக வேறு மாகாணத்தார்களால் எழுத முடிவதில்லை. பத்திரிகைகளின் கௌரவமான நடத்தையை எடுத்துக்கொண்டாலும் மற்ற மாகாணங்களைவிட நமது மாகாணம் தான் ரொம்ப விசேஷமாயிருக்கிறது. எனவே இந்தியாவிலேயே மிகச்சிறந்த பத்திரிகைகளையும், பத்திரிகையாளர்களையும் நமது மாகாணம் பெற்றிருப்பதால், நாம் பெருமை கொள்ள இடமிருக்கிறது. நமது மாகாணத்திற்கு தற்சமயம் இருக்கும் இந்த உயர்ந்த பதவியை இன்னம் உயரும்படி இடைவிடாமல் வேலை செய்ய வேண்டியது பத்திரிகையாளர்களின் கடமை. மிகச் சிறந்த பத்திரிகையாளர்கள் நமது மாகாணத்தில் தோன்றியிருந்தார்கள்; இப்பொழுதும் இருக்கிறார்கள்.

3. தற்கால தமிழ் பத்திரிகை

பிரான்சில் ஜெர்மனியர் பருந்து பாய்ச்சல் விமானங்களை உபயோகித்தார்கள் என்ற செய்தியை தமிழ் பத்திரிகைகளில் நீங்கள் படித்திருப்பீர்கள். படிப்பவர்களுக்கு இந்த வாக்கியத்தில் புதிதாக எதுவும் இருப்பதாக தெரியாது. ஆனால் பத்திரிகைக்காரர்களுக்குத்தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும். யுத்தம் நடக்கிற வேகத்தில் எத்தனையோ புது புது வார்த்தைகளும் சொற்றொடர்களும் சிருஷ்டியாகின்றன. இவையெல்லாம் தாய்பாஷை பத்திரிகைக்காரர்களின் தலையில் வந்து விழுகின்றன. தந்திகள் எல்லாம் ஆங்கிலத்தில் வருவதால் ஆங்கிலப் பத்திரிகைகளை நடத்துபவர்களுக்கு, மொழி பெயர்க்க வேண்டிய சிரமம் எதுவும் கிடையாது. வந்த வார்த்தைகளை அப்படியே போட்டுவிடலாம். தமிழ் பத்திரிகைகள் அதை மொழிபெயர்த்தாகவேண்டும். சாவகாசமாக யோசித்து ஒரு தமிழ் வார்த்தையை கண்டுபிடிக்கலாம் என்ற பேச்சுக்கோ இடமில்லை. அன்று வந்த செய்திகள் அன்று மாலை பத்திரிகையில் போயாக வேண்டும். அதற்குள்ளாக வார்த்தையை கண்டு பிடிக்கவேண்டும். அவ்வளவு அவசரம். எனவே புதிதாக ஒரு வார்த்தை வந்துவிட்டால், பத்திரிகை ஆபீசில் ஏற்படும் பரபரப்பைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் மூளையை ஓட்டுவார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு வார்த்தையை சொல்லுவார். எல்லாவற்றையும் பார்த்து அவற்றில்

து பொருத்தமானதென்று தோன்றுகிறதோ அது அன்றைய பத்திரிகையில் வரும். Dive Bombers என்ற வார்த்தைக்குப் பருந்து பாய்ச்சல் விமானங்கள் என்ற தமிழ் பெயரை கேட்டபின்பு, அது பொருத்தமாயிருக்கிறதென்று அநேகர் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அந்த வார்த்தை பத்திரிகை நிலையங்களில் எவ்வளவு வேலையை கொடுத்தது என்பது, வெளியிலுள்ளவர்களுக்குத் தெரியாது. ரஷ்யாவுடன் ஜெர்மனி யுத்தம் ஆரம்பித்தவுடன் Scorched Earth Policy என்ற பதங்கள் புதிதாய் உபயோகத்திற்கு வந்தன. இதற்குத்தான் பொசுக்கல் கொள்கை என்ற தமிழ் பதம் அமைக்கப்பட்டது. Successful retreat என்ற பதம் யுத்த செய்திகளில் தற்சமயம் தண்ணீர் பட்ட பாடாய் இருக்கிறது. அதற்கு தமிழ் வார்த்தைகளாக 'வெற்றிகரமான வாபஸ்' என்ற பதத்தை தமிழ் பத்திரிகைகள் உபயோகிக்க ஆரம்பித்தன. இன்று தமிழ் நாடெங்கும் இந்த 'வெற்றிகரமான வாபஸ்' என்ற பதம் சர்வ சாதாரணமாக வழங்குகிறது. அதை அறியாதவர்களே இருக்கமுடியாது. இம்மாதிரியாக பல புது வார்த்தைகளையும், வாக்கியங்களையும், அர்த்தங்களையும் ஏற்படுத்தும் வேலையை தமிழ் பத்திரிகைகள் செய்து வருகின்றன. ஆங்கிலம் படிக்காதவர்கள் கூட தமிழ் பத்திரிகைகளைப் படித்து யுத்த செய்திகளின் பொருளை நன்றாய் தெரிந்துகொள்ளும் வண்ணம், தமிழ் மொழி தற்சமயம் வளர்ந்திருக்கிறது. இதற்குப் பத்திரிகைகளே காரணம்.

தமிழ் வசன நடை

50 வருஷங்களுக்கு முன்னால் இருந்த தமிழ் வசன நடைக்கும் இப்போது இருப்பதற்கும் ரொம்ப ரொம்ப வித்தியாசமுண்டு. இவ்வளவு எளிய நடையில்கூட தமிழை எழுதமுடியுமா என்று ஆங்கிலத்தில் மட்டுமே உழன்று கொண்டிருந்த தமிழர்கள் ஆச்சரியப் படுகிறார்கள். ராஜீய அபிப்பிராயங்களையெல்லாம் தமிழில் எழுத முடியும் என்பதை பார்க்கும்போது அவர்களுக்கு வியப்பு ஏற்படுகிறது. இதற்குக் காரணம் தமிழில் வசன நடை என்பது சமீபகாலத்தில்தான் ரொம்ப அபிவிருத்தி அடைந்திருப்பதாகும். நமது முன்னோர்கள் கவிதைகளிலேயே தங்கள் திறமையைக் காட்டினார்கள். வசன நடையை கவனிக்கவில்லை. வசன நடைதோன்றிய பின்பும், சாதாரண ஜனங்கள் புரிந்துகொள்ள முடியாமல் எழுதுவதே ஒரு புத்தகத்தில் முதல் லட்சணமாய் இருக்கவேண்டுமென்று ஒரு பரம்பரையும் தோன்றியது. குறள் புரியவில்லை யென்று அதன் உரையை பார்த்தால், குறளைவிட அது கடினமாயிருக்கும். அது ஒரு காலம். அந்த பரம்பரை, தமிழ் நாட்டில் முதல் முதலில் சஞ்சிகைகள் தோன்றியபோது, சில சஞ்சிகைகளில் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தது. தங்களுடைய தமிழறிவைக் காட்ட வேண்டு மென்பதைத்தவிர, பலர் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு இருந்ததாக தெரியவில்லை. வசன நடையில் ஆரம்பமான சில சஞ்சிகைகள் இந்த படுகுழியில் அகப்பட்டுக்கொண்டன. எழுதுகிறவர்களைப்போல, கடுந்தமிழை

புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் படைத்தவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு அந்த வசன நடையால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. ஆகவே, கவிதைகளுக்கும் ஜனங்களுக்கும் எப்படித் தொடர்பில்லாமலே இருந்ததோ, அதைப்போல், இந்த கடுந்தமிழுக்கும் ஜனங்களுக்கும் தொடர்பில்லாமலே இருந்தது.

ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று எழுதுகிறவர்கள் விரும்பினால், ஜனங்கள் புரிந்து கொள்ளும் பாஷையில் எழுதவேண்டும். அந்த ஆசை ஏற்பட்ட பின்புதான் வெகுவேகமாக வசன நடை வளர ஆரம்பித்தது. ராஜீய விழிப்பே அந்த ஆசையை உற்பத்தி செய்தது. ஜனங்கள் எல்லாருக்கும் ராஜீய ஞானம் ஏற்படவேண்டும் என்று ராஜீயவாதிகள் ஆவல்கொண்டார்கள். எனவே கடுந்தமிழுக்கு சீட்டு கொடுத்துவிட்டு, எல்லாருக்கும் புரியக்கூடிய சுலபமான தமிழில் எழுத ஆரம்பித்தார்கள். இந்த முயற்சிக்கு கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரே வழிகாட்டினார். அவருடைய நடை சுலபமாய் இருக்கும். தெளிவாயிருக்கும். நேராக மனதில் சென்று பதியக்கூடியதாயிருக்கும். இந்த விதமாக, பேசுவதைப்போன்ற சுலபமான வசன நடையைப் பார்த்ததும்,ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அதைப் படிப்பதற்கு ஆவல் கொண்டார்கள். அந்தஆவலோடு தற்கால வசன நடையும் வளர ஆரம்பித்தது. அதனால் பத்திரிகைகளும் பெருக ஆரம்பித்தன. அதன் பலனாக இன்று கிராமங்களில் பொதுவிஷய அறிவு முன்னைவிட எவ்வளவோ அதிகமாக பரவியிருக்கிறது.

மற்றொரு முக்கியமான அபிவிருத்தி பத்திரிகை

களால் ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஊரில் 'எங்கிட்டுப் போராப்பலே' என்று பேசுவது வழக்கமாயிருக்கலாம். மற்றொரு ஊரில் 'எங்கே போரீங்க' என்று பேசலாம். இன்னொரு ஊரில் 'எங்கே போரீக' என்று கேட்கலாம். ஆனால் எல்லா ஊர்களிலும் எழுதும் போது 'எங்கே போகிறீர்கள்' என்றே எழுதுவார்கள். எனவே பேசும் தமிழ், ஜில்லாவுக்கு ஜில்லா கொஞ்சம் மாறுபட்டிருந்தாலும், எழுதும் தமிழ் அநேகமாய் எல்லா ஜில்லாக்களிலும் ஒரே விதமாய் அமைந்துவிட்டது. தமிழ் ஜில்லாக்கள் என்றால் இந்தியாவிலுள்ள ஜில்லாக்களையே குறிப்பிடுகிறேன். இலங்கையைக் குறிப்பிடவில்லை. அங்குள்ள அர்த்தம், உச்சரிப்பு, ஆகியவை வேறுபடுகின்றன. Public Well என்றால் பொதுக்கிணறு என்று சொல்லுவதுதான் தமிழ் நாட்டில் வழக்கம். இலங்கையில் பகிரங்கக் கிணறு என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய தமிழும் தென்னிந்தியத் தமிழும் கலந்து ஒரு நிலையை அடையவில்லை. ஆகவே தமிழ் நாட்டை மட்டும் தற்சமயம் கவனித்தால் போதும். எழுதும் தமிழ், தமிழ் நாட்டில் ஒன்றுபட்டதற்கு காரணம் பத்திரிகைகள்தான். பத்திரிகைகளில் இருப்பவர்கள் பல ஜில்லாக்களைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் பத்திரிகைகளுக்கு நிருபர்கள் இருப்பார்கள். எனவே பல ஜில்லாக்களிலும் தனித்தனியாக வழக்கத்தில் இருந்த வார்த்தைகள் பத்திரிகைகள் மூலம் எல்லா ஜில்லாக்களுக்கும் பரவி அவற்றை எல்லாரும் புரிந்துகொள்ளும்படி செய்துவிட்டன. வசன நடைக்கு இது ஒரு பெரிய உதவி என்பதில் சந்தேகமில்லை.

பத்திரிகைகள் செய்த உதவி

தமிழ் பத்திரிகைகள் அதிகமாய் பரவுவதற்கு முன்னால், தமிழில் ராஜீய பிரசங்கம் செய்பவர்கள் பாடு ரொம்ப கஷ்டமாயிருக்கும். பிரிட்டிஷ் மந்திரி சபை நமக்கு சுயராஜ்யம் கொடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடத் தெரியாது. பிரிட்டிஷ் காபினெட் நமக்கு செல்ப் கவர்ன்மெண்ட் கிரான்ட் பண்ண வேண்டும், என்பார்கள். அவர்களையெல்லாம் இன்று தனித் தமிழில் பேசும்படி வைத்தது தமிழ் பத்திரிகைகள்தான். ஆங்கில அரசியல் பதங்களுக்கு தமிழ் பதங்கள் தெரியவில்லை என்ற காரணத்திற்காக அநேகர் தமிழில் பிரசங்கம் செய்வதில்லை. ஆங்கிலம் புரியாத ஜனங்களிடம் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்வது வேடிக்கையாயிருக்கும். காலஞ்சென்ற ஸ்ரீ. சீனிவாசஐயங்கார் அப்படிச்செய்வதை மறுத்துவிட்டார். தமிழ் பத்திரிகைகள் இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கும்போது, தமிழில் பேசுவதில் என்ன கஷ்டம் என்று அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் கேட்டார். தமிழ் பத்திரிகைகள் பரவுவதற்கு முன்பு, ஆங்கிலம் படித்தவர்கள், தாங்கள் படித்த செய்திகளை ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு சொல்லுவதற்கு ரொம்ப சிரமப்படுவார்கள். 'பியூராக்ரஸிக்கு நல்ல விப் கொடுத்திருக்கிறார்' என்பார்கள். கேட்கிறவர்களுக்கு பியூராவாவது, கிரிஸியாவது, விப் ஆவது என்னதென்றே ஒன்றும் புரியாது. அதிகாரவர்க்கம் என்று சொன்னால் ஜனங்களுக்கு எவ்வளவு சுலபமாகப் புரிகிறது? இந்த பியூராக்ரஸி என்ற வார்த்தையை முதலில் லோகமான்ய திலகர் தமது 'கேஸரி'

பத்திரிகையில் உபயோகித்தார். அதை ஸ்ரீ. சுப்பிரமணிய அய்யர் அதிகாரவர்க்கம் என்று தமிழ்படுத்தி 'சுதேசமித்திரனி'ல் புகுத்தினர். இம்மாதிரியாக எத்தனேயோ வார்த்தைகளை தமிழ் பத்திரிகைகள் வழக்கத்திற்கு கொண்டுவந்திருக்கின்றன. புது வார்த்தைகள் வர வர, தமிழிலும் அவற்றிற்கு சரியான வார்த்தைகள் வந்துகொண்டிருக்கின்றன. தினசரி தமிழ் பத்திரிகைகளுக்கு அப்படி செய்யவேண்டியது கட்டாயமாயிருக்கிறது. புதிய வார்த்தைகளைக்கண்டு பழைய பிற்போக்காளர்கள் கோபங் கொள்ளலாம். அந்த வார்த்தை அசல் வார்த்தையின் அர்த்தத்தைச் சரியாக கொடுக்கவில்லையென்று புகார் செய்யலாம். குறைசொல்லுவது எப்பொழுதும் சுலபம். புது வார்த்தைகள் அமைக்கவேண்டிய சமயங்களில் பண்டிதர்களின் சம்மதத்தை பெற காத்துக்கொண்டிருக்க முடியாது. அன்றன்று பத்திரிகை வெளியாக வேண்டும். மேலும் ராஜீய விஷயங்களில் அனுபவமுள்ள பத்திரிகைக் காரர்களுக்குத்தான் கூடியவரையில் தகுந்த வார்த்தைகளை அமைக்கும் ஆற்றலுண்டு. அவர்கள் அமைப்பதைவிட நல்ல பொருத்தமான வார்த்தைகள் பண்டிதர்களுக்கு கிடைப்பதாய் இருந்தால், அவற்றை பத்திரிகைகளுக்குத் தெரிவித்தால், கண்டிப்பாக அவை ஏற்றுக் கொள்ளும். அதுதான் தமிழை வளர்ப்பதற்கு பண்டிதர்கள் செய்யக்கூடிய சரியான உதவி. இதுவரை அம்மாதிரி வழியில் உதவி செய்ய யாரும் முன் வரவில்லை. ஆகவே பத்திரிகைகள் உபயோகிக்கும் வார்த்தைகள் சரியானவை என்று பொதுவாக பண்டிதரும் பாமரரும் ஒப்புக்கொள்ளுவதாகவே

நினைக்கவேண்டி யிருக்கிறது. வசன நடை அபி விருத்தி யடையாத காலத்தில், அதாவது பத்திரிகைகள் தோன்றுவதற்கு முன்பு, பாதி வசனமும், பாதி பாட்டுமாயுள்ள நல்லதங்காள் சரித்திரம், பாண்டவர் வனவாசம், போன்ற புத்தகங்களே இருந்தன. பிறகு தான் விநோத ரஸ மஞ்சரி என்ற கவிகளின் சரித் திரம் பிரசுரமாயிற்று. ராஜீய நூல்கள் என்று தமிழில் எழுதி முதலில் வெளியிட்டது பத்திரி காசிரியர் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர்தான். "ஜப்பான்", "ஜன நிர்மாணம்" என்ற இரண்டு புத்தகங்களை அவர் முதலில் எழுதினர். அச்சமயத்தில்தான் பத்திரிகை கள் பரவ ஆரம்பித்தன. சென்ற மகா யுத்த காலத்தில் பத்திரிகைகள் அதிகமாய்ப் பரவி, படிப்பதில் ஜனங் களுக்கு சுவையை உண்டுபண்ணின. அக்காலத்தில் தான் முதல் முதலில் பெருவாரியாக நாவல்களும் இதர புத்தகங்களும் வெளிவர ஆரம்பித்தன. எனவே, தற்காலம் தமிழில் ஏராளமாய் புத்தகங்கள் வந்திருக்கின்றன என்ருல், இவற்றிற்குக் காரணம் பத்திரிகைகள்தான். எழுத்தாளர்கள் தமிழில் ஏராள மாய் தற்சமயம் இருப்பதற்குக் காரணமும் பத்திரிகைகள்தான்.

தற்கால தமிழ் வசன நடையின் பெருமையை பத்திரிகைகளே சிறப்பட்டுத் தேடிவைத்திருக்கின் றன. தமிழர்கள் பெருமைகொள்ளும் விதத்தில் இன்று தமிழ்நடை சிறப்படைந்திருக்கிறது. 'இன்டர்நாஷ னல் சிட்டுயேஷனைப்பற்றி ஜவாஹர்லால் அனலைஸ் பண்ணினது ஒன்டர்புலாய் இருந்தது' என்று சொல்ல வேண்டிய அவசியமே தற்சமயம் இல்லை. அப்படிப் பேசினல் ஆங்கிலம் தெரியாத தமிழருக்கு புரியவே

புரியாது. எல்லாத் தமிழருக்கும் புரியக்கூடிய விதத்தில், 'சர்வதேச நிலைமையைப் பற்றி ஜவாஹர்லால் ஆராய்ச்சி செய்து பேசியது அற்புதமாய் இருந்தது' என்று சுலபமாய் சொல்லலாம். இவ்வளவுக்கும் காரணம் தமிழ் பத்திரிகைகள்தான்.

பாட புத்தகங்கள்

பண்டிதர்களின் பாஷை எப்படி பாமரர்களிடம் தொடர்பில்லாமல் இருக்கிறதோ அதைப்போல பள்ளிக்கூட பாஷையும் இருக்கிறது. தமிழிலேயே எல்லாவற்றையும் சொல்லிக்கொடுப்பது நல்ல முயற்சிதான். ஆனால் சில ஆங்கில வார்த்தைகளுக்கு பாட புத்தகங்களில் காணப்படும் தமிழ் வார்த்தைகள் விசித்திரமாயிருக்கின்றன. ஆகவே பாட புத்தகங்களை படித்தவர்கள் பத்திரிகைகளை படிக்கும்போதும் பத்திரிகைகளைப் படிப்பவர்கள் பாடபுத்தகங்களைப் படிக்கும்போதும் திண்டாட வேண்டியிருக்கும். இந்தகஷ்டத்தைப் போக்கவேண்டுமானால், இதுவரை பத்திரிகைகளில் உபயோகிக்கப்பட்ட வழக்கமான வார்த்தைகளை பாட புத்தகங்களில் அப்படியே சேர்த்துக்கொள்ளவேண்டும். பத்திரிகை பிரதிநிதிகளோடு தமிழ் பாடபுத்தகங்களை வெளியிடும் கம்பெனிகளோ அல்லது கல்வி இலாகா அதிகாரிகளோ தொடர்பு வைத்துக்கொண்டால், பாட புத்தகங்களில் தற்சமயம் காணப்படும் வேறுபாடுகளும் மறைந்துவிடும். இப்பொழுது இல்லாவிட்டாலும், எப்பொழுதாவது இம்மாதிரி ஏற்பாடுவரத்தான் போகிறது. அது வந்தபின்பு தமிழ் வசன நடை இன்னும் அதிகமாய் பிரகாசிக்கும். வார்த்தைகளுக்கு நிர்ணயமும் ஏற்படும். அதன்

மூலம் பாஷையில் சக்தியும் வளமும் அதிகமாகும். சரியான வார்த்தைகள் கிடைக்காமல், இது, அது என்று மொட்டையாகவும் ஜாடை காட்டியும் பேச வேண்டிய அவசியம் இருக்கவே இருக்காது. பத்திரிகைத் தமிழ் என்றால் ஏதோ தனித் தமிழ் என்று யாரும் எண்ணவேண்டாம். அதுதான் அசல் தமிழ். அதுமட்டுமல்ல; அதுதான் தமிழ்.

4. அன்னிய வார்த்தைகள்

ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுவதற்காகத் தான் பாஷை அல்லது மொழி ஏற்பட்டிருக்கிறது. உலகத்தில் புதிதாக பல விஷயங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவற்றை அறிய வேண்டுமானால் புதிய விஷயங்களை விளக்கக்கூடிய வார்த்தைகள் வேண்டும். அவற்றை அறியாமல் மனிதன் முன்னேற்றமடைய முடியாது. எனவே, ஒவ்வொரு பாஷையும் புதிய சொற்களை சேர்த்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்படி சேர்க்க வேண்டிய அவசியமில்லாமல் பூர்ணத்துவத்தை அடைந்த பாஷை எதுவுமே இல்லை. ஏனெனில், என்னென்ன புது விஷயங்கள் எதிர்காலத்தில் வரு மென்பதை யாராலும் முன்னதாக அறிய முடியாது. எனவே, எந்த மொழியையாவது "தனித்திலங்கும் மொழி" என்று யாராவது சொன்னால், அது வெறும் பைத்தியக்கார பேச்சாகவே இருக்கும். அதைப்போலவே எந்த பாஷையிலாவது புதிய சொற்கள் அவசியமில்லை யென்று யாராவது சொன்னால், அவர்களை அலெக்ஸாண்டிரியா புத்தக சாலையை கொளுத்தியவனோடுதான் சேர்க்கவேண் டும். ஆகவே, தமிழ் மொழியை பாதுகாக்கவேண் டும் என்று சிலர் பேசுவதை கேட்டால் சிரிப்பே வருகிறது.

பாதுகாப்பு, இரும்பு ஜோடு

பாதுகாப்பு என்ருல், இருக்கிறதை மாறவிடாமல் காப்பது என்றே அர்த்தம். தமிழ் மொழிக்கு இப்பொழுது வேண்டியது பாதுகாப்பா, அல்லது வளர்ச்சியா என்பதை தமிழர் சிந்திக்கவேண்டும். தமிழ்ப் புலவர்கள் மொழிப் பாதுகாப்பு என்று கதறுகிருர்கள். பாதுகாப்பில் நின்ருல் வளர்ச்சியில்லாமல் போய்விடும். சீஞ தேசத்தில் பெண்களின் பாதங்களை பாதுகாக்கும் வழக்கம் ஒன்று இருந்தது. பெண்கள் குழந்தைகளாய் இருக்கும் போதே அவர்கள் பாதங்களில் ஜோடுகளை போட்டு விடுவார்கள். பணக்காரர்கள் இரும்பு ஜோடுகள் கூட போடுவார்கள். எப்பொழுதும் கழற்ருமல் அப்படியே போட்டுவைப்பதால், குழந்தைகள் பெண்களாய் வளர்ச்சியடைந்தாலுங்கூட பாதங்கள் மட்டும் குழந்தைகளின் பாதங்களாகவே இருக்கும். மாறுதலே ஏற்படாது. பாதுகாப்பு வெற்றிகரமாய் நடக்கும். ஆஞல்......? பெரிய பெண்கள் கூட சரியாய் நடக்க முடியாமல் தத்திக்கொண்டிருப்பார்கள். அவர்களின் உடம்பு வளர்ச்சிக்கு தக்கபடி பாதத்தையும் வளரவிடாமல் "பாதுகாத்து" வந்தபடியால், கால்கள் இருந்தும் நடக்க முடியாத நொண்டிகளாகிருர்கள். பாத பாதுகாப்பின் பலன் இதுதான். பாஷையையும் இதேமாதிரி வளர்ச்சியடையாமல் பாதுகாப்பதென்ருல், முன்னேறிய உலகத்தில் தலை நிமிர்ந்து சரி நிகர் சமானமாய் நடக்க முடியாமல் தமிழர் தத்திக்கொண்டிருக்க வேண்டியதுதான். அம்மாதிரி தத்திக்கொண்டிருந்தாலும்

பாதகமில்லை, தமிழ்மொழியை பாதுகாக்க வேண்டும் என்று புலவர்கள் சொல்லுகிறார்கள். உங்களுக்கு அது சம்மதமா? ஏனெனில், பாஷை உங்களுக்கே யொழிய புலவர்களுக்கு மட்டுமல்ல. தத்திக்கொண்டிருக்க நீங்கள் சம்மதிக்க மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாய் தெரியும். ஆகவே, இந்த விஷயத்தில் நீங்கள் சிந்தனை செய்து உங்கள் அபிப்பிராயத்தை வற்புறுத்த வேண்டும்.

தனித் தமிழில் முடியுமா?

வளர்ச்சியடைந்து வரும் எல்லா விஷயங்களையும் தனித் தமிழில் சொல்ல முடியும் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சொல்ல முடிந்தால் ரொம்ப சந்தோஷந்தான். ஆனால் அப்படி செய்வதுதான் இல்லை. ஹைகோர்ட் என்ற வார்த்தை ஆங்கில வார்த்தை. அதை உபயோகிக்க பண்டிதர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அதற்காக அவர்கள் சொல்லும் தனித் தமிழ் வார்த்தை என்ன தெரியுமா? உயர்தர நீதிமன்றம். இதில் தர, நீதி இரண்டும் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த வார்த்தைகள். பிற மொழிச் சொற்களை உபயோகிக்கக் கூடாதென்றால், அந்த இரண்டையும் தள்ளிவிட வேண்டியதுதான். தள்ளிவிட்டால் மீதமிருப்பது உயர்மன்றம்தான். ஹைகோர்ட் என்ற வார்த்தைக்கு இது சரியான மொழிபெயர்ப்பல்ல. தர, நீதி இரண்டும் தமிழிலேயே கலந்து வெகு காலமாய் விட்டபடியால் அவற்றை, சம்ஸ்கிருதமாயிருந்தாலும் உபயோகிக்கலாம் என்றால், சுலபமாய் எல்லாருக்கும் புரியக்கூடிய ஹைக்கோர்ட் என்ற வார்த்தையை ஏன் உபயோகிக்கக்

கூடாது? பிறமொழிகளில் எந்த மொழியாய் இருந்தால் என்ன? பாகிஸ்தானை எந்த தமிழ் புலவராலாவது மொழி பெயர்க்க முடியுமா? வெடரேஷன், கான்வெடரேஷன் இவைகளுக்கு தனித் தமிழில் என்ன வார்த்தைகள் இருக்கின்றன? தெர்மாமீட்டர் என்று சொன்னால் சகலருக்கும் புரியும்போது, ஒருவருக்கும் புரியாத ஒரு புதிய தமிழ் சொல்லடுக்கை உபயோகிக்க வேண்டிய அவசியமென்ன?

தமிழில் பிறபாஷை வார்த்தைகள்

இப்பொழுது நடந்துவரும் யுத்த செய்திகளை படிப்பதில்தான் ஜனங்களுக்கு ரொம்ப ஆவல் இருக்கிறது. இந்த செய்திகளை தனித் தமிழில் கொடுக்க பண்டிதர்களால் முடியுமா? டாங்கி, விமானம், பெட்ரோல், மோட்டார், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டா ஆகிய வார்த்தைகளை உபயோகிக்காமல் யுத்த செய்திகளை அவர்களால் சொல்லவே முடியாது. டாங்கியும், பெட்ரோலும், மோட்டாரும் ஆங்கிலம். இவற்றை எப்படி மொழிபெயர்ப்பார்கள்? தானே இயங்கும் ஊர்தி என்று ஒவ்வொரு தடவையும் மோட்டாருக்கு பதில் நீளமாக எழுதுவார்களா? விமானம், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டாவை எடுத்துக்கொள்ளுவோம். இவையெல்லாம் தமிழ் வார்த்தைகள்தானே என்று நீங்கள் நினைக்கலாம். புலவர்களின் தனித் தமிழ் கொள்கைப்படி இவை தமிழ் வார்த்தைகளே அல்ல. விமானம் சம்ஸ்கிருதம். பீரங்கி போர்ச்சுக்கேய பாஷையிலிருந்து வந்தது. குண்டு மராத்தி பாஷை. துப்பாக்கி துருக்கி பாஷை. தோட்டா உருதுவி

விருந்து வந்து சேர்ந்தது. இவ்வளவையும் பிற மொழிச் சொற்கள் என்று தள்ளிவிட்டால், இவற்றிற்கு பதிலாக தனித் தமிழில் எப்படி சொல்லுவார்கள்? விமானத்திற்கு பறக்கும் வண்டியென்றும், பீரங்கிக்கு உருண்டு நீண்ட குழாயுள்ள வெடியென்றும் சொல்லுவார்களா? அப்படி சொன்னால் அவை பொருத்தமா யிருக்குமா, அல்லது ஜனங்களுக்குத்தான் புரியுமா?

இவற்றை யெல்லாம் பார்த்தால் தனித் தமிழில் யுத்த செய்திகளை சொல்லவே முடியாது என்பதை அறிந்து கொள்ளலாம். தனித் தமிழில் தான் பேசுவேன் என்று யாராவது வைராக்கியம் கொண்டால், யுத்த செய்திகளைப் பற்றி பேச வேண்டிய இடங்களில், ஊமையரைப்போல அபிநயத்தில் காட்டலாமேயொழிய, வாயினால் பேசமுடியாது. அபிநயத்தால்தான் கருத்தை வெளியிட முடியுமென்றால்; அப்புறம் அந்த பாஷை இருந்துதான் பயனென்ன? இதைப்போலவே மற்ற துறைகளிலும் வளர்ச்சிக்கு தக்க வார்த்தைகள் தமிழுக்கு அவசியமாயிருக்கின்றன. தமிழ் தனித்திலங்கக்கூடிய மொழி என்பது உண்மையானால், கலை சொற்களை தமிழில் அமைக்க வேண்டும் என்ற பேச்சுக்கு அவசியமே இல்லை. புத்தம் புதிய கலைகளுக்கு வேண்டிய சொற்கள் தற்சமயம் தமிழில் இல்லையென்பதையே அது காட்டுகிறது. அந்த நிலைமையில் "மொழி பாதுகாப்பு" என்று பேசுவதற்கு அர்த்தமே இல்லை. ஏனெனில், சுலபமாய் புரியக்கூடியதும், பழக்கத்தில் வந்து விட்டதுமான ஒரு வார்த்தையை தமிழாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதற்கு பதில் தனித்

தமிழ் வார்த்தையை உண்டுபண்ணப் புறப்படுவது வீண் வேலையே தவிர வேறு எதுவுமில்லை. அறிவு வளர்ச்சிக்குத்தான் பாஷையே யொழிய, சில கிணற்றுத் தவளைகளின் தற்பெருமைக்காக பாஷை யல்ல.

கலை சொற்கள்

கலை சொற்கள் எல்லாவற்றையும் தனித் தமிழில் ஆக்கவேண்டுமென்று சொல்லுவது உபயோகமில்லாத வேலை. தமிழரின் ஜனத்தொகை இரண்டரை கோடி இருக்கலாம். இந்த சொற்ப ஜனத்தொகையுள்ள ஒரு பிரதேசத்தில், சகல கலைகளுக்கும் உள்ள உயர்தரப் படிப்பை சொல்லிக் கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தி நடத்திவர முடியுமென்று நினைப்பது வெறும் பகற்கனவு. ஒன்று, இரண்டு தான் இங்கே ஏற்பட முடியும். பாக்கியுள்ளவை இந்தியா பூராவிலும் பரவி நிற்பதுதான் சாத்தியம். எனவே, தமிழ் கலை சொற்களைக் கொண்டு ஒரு கலையில் ஆரம்ப படிப்பை முடித்துவிட்டு, மற்றொரு மாகாணத்திற்கு உயர்தர படிப்புக்கு போனால், அங்குள்ள பாஷையின் கலை சொற்களை புதிதாக படித்தாக வேண்டும். இந்த கஷ்டத்தை தவிர்க்க வேண்டுமானால் இந்தியா பூராவுக்கும் பொதுவான ஒரு பாஷையில் கலை சொற்கள் இருக்கவேண்டும். அப்படி செய்வதுதான் புத்திசாலித்தனமானது. அது தான் காரிய சாத்தியமானது. அதைவிட்டு தனித் தமிழில் எல்லா கலை சொற்களும் வேண்டுமென்று சொல்லுவது வெறும் குருட்டுத்தனமாகும்.

தமிழர் வளர தமிழ் வளர வேண்டும்

தமிழ் மொழி, வளர்ச்சி முடிந்ததல்ல. வளர்ந்து கொண்டே இருப்பது. வளர்ச்சி முடிந்ததற்கோ அல்லது வளரவிடாமல் தடுப்பதற்கோ தான் "பாது காப்பு" வேண்டும். அந்த பாதுகாப்பு வேலைக்கு யாரும் தர்மகர்த்தாக்களாக முன்வருவதற்கு தமிழர் இடம் கொடுக்கக் கூடாது. ஏனெனில், தமிழர் வளர்ச்சியடைய வேண்டும். தமிழர் வளர்ச்சியடைய வேண்டுமானால் தமிழ் வளர வேண்டும். தமிழ் வளர வேண்டுமானால், தமிழ் வளர்ச்சிக்கு அவசியமான எந்த திசை சொல்லையும் தள்ளிவிடக் கூடாது. கூடிய வரையில் தமிழில் வார்த்தைகளை உபயோகிக்க வேண்டியதுதான். முடியாத இடங்களில் தாராள மாக பிற பாஷை சொற்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

புலவர்கள் உருப்படியான வேலைகள் எதுவும் செய்ய முன் வருவதில்லை. மோட்டாரை, தானே இயங்கும் ஊர்தி என்று அவசியமில்லாமல் மொழி பெயர்த்துக் கொண்டிருப்பார்கள். ஆங்கிலத்தி லுள்ள அவசியமான வார்த்தைகளுக்கு பொருத்த மான தமிழ் வார்த்தைகளை கண்டு பிடிப்பதில்லை. உதாரணமாக, பாலிஸி, பிரின்ஸிபிள், கிரீட், டாக்ட்ரின் ஐடியா ஆகிய இத்தனை வார்த்தைகளும் வெவ்வேறு பொருளைக் கொண்டவை. என்றாலும், இவை எல்லா வற்றிற்கும், கொள்கை என்ற ஒரே வார்த்தைதான் தற்சமயம் வழக்கத்தில் இருக்கிறது. இந்த புலவர் கள் ஏன் ஐந்து வெவ்வேறு வார்த்தைகளை கண்டு பிடிக்கக்கூடாது? வக்கீலுக்கு, வழக்கறிஞர் என்று

சொல்லலாமா, நியாயவாதி என்று சொல்லலாமா என்ற ஆராய்ச்சி அவசியமில்லை. பெயர்களை மொழி பெயர்ப்பதை விட்டு, பலரக கருத்து வார்த்தைகளுக்கு பொருத்தமான, சுலபமான தமிழ் சொற்களை கண்டுபிடிப்பார்களாக. அதுதான் ரொம்ப அவசியம். அந்த வேலையில் அவர்கள் இறங்கினால் தமிழ் தானாகவே வளர்ச்சி யடையும். "பாதுகாப்பு" வேண்டுமே என்ற பயம் அவர்களுக்கு ஏற்படவே செய்யாது.

ஜெய் ஹிந்த்

சீக்கிரம் வெளிவரும் புத்தகங்கள்

சமூகப் பிரச்னைகள்

தற்கால தமிழ்நாட்டு சமூகப் பிரச்னைகள் பலவற்றிற்கு பரிகாரம் கூறுமாறு நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு ஸ்ரீமான்கள் டி. எஸ். சொக்கலிங்கம், வ. ரா., டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் சுப்பராயன், திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், ஸர் என். கோபாலஸாமி ஐயங்கார் முதலியோர் அளித்துள்ள பதில்கள் அடங்கியது.

ஜாதிகள் ஒழிய வேண்டும்

(ஸ்ரீமான்கள் டி. எஸ். சொக்கலிங்கம், வ. ரா., எஸ். ராமனுதன், டாக்டர் சுப்பராயன்.)

நம் தமிழ் நாடு

(டி. என். சுப்ரமணியம்)

சீனு

(ஆர். வெங்கட்ராஜுலு)

இன்றைய ஜப்பான்

(கே. அருணுசலம்)

வெளிவந்து விட்டது!

1: 4

ஸோவியத் யூனியன்

ஏ. ஜீ. வெங்கடாச்சாரி

சமூகத்தில் பிரஜைகளுக்கு சரிசம சந்தர்ப்பம் அளித்துள்ள ரஷ்யாவைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் இதில் காணலாம்.

புரட்சிக்கு முன் இருந்த நிலைமை, ஐந்து வருஷ திட்டங்கள், புது நாகரீகம், ஸோவியத் ஜனநாயகம், ஸர்வ தேச உறவுகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

விலை ரூ. 1-8-0

கமலா பிரசுராலயம்

ஸரபாலி ஹவுஸ்

157, பிராட்வே, சென்னை

Cover Designed & Printed by P. A. S. Press, Post Box 349, Mount Road, Madras